SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 36. TML1175 - எட்டுத்தொகை நூல்கள் சுட்டும் மகளிர் விளையாட்டுகள்

முனைவர் வே.பொ. வளர்மதி
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை, வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),
ஈரோடு–12

## முன்னுரை

*மனிதன் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தபோது பல சவால்கள் அவன் முன் இருந்தன. அவை அவனுக்கு ஆற்றலைப் பெருக்கிக் கொள்ளவும், இயற்கையை எதிர் கொள்ளவும் அவனுக்குக் கற்றுத்தந்தது. தொடக்கத்தில் தற்பாதுகாப்புக்காக ஓடவும், சாடவும், தாண்டவும், நீந்தவும் செய்வதன் சமூகவளர்ச்சியில் நிலையான வாழ்க்கைக்கு வந்த போது அவற்றினைத் தன் ஆற்றலின் அடையாளமாகவும், விளையாட்டாகவும் மாற்றியிருக்க வேண்டும். இவ்விளையாட்டுகளின் தோற்றம் குறித்து, "வீரத்தை வளர்க்க, பயத்தைவிரட்ட, நம்பிக்கையை ஊட்ட, நண்பர்களைப் பெருக்க, பொழுது போக்கை வரவேற்க, முரண்பாட்டை உணர்ந்த, வாழ்க்கையினையும், தொழிலினையும் எதிரொலிக்க, போலச் செய்ய எனப் பல நிலைகளில் விளையாட்டுகள் தோன்றலாயின" என்கிறார். சு. சிவசாமிசுந்தரி (சங்க இலக்கிய விளையாட்டுக் களஞ்சியம்)*

மனித சமூகம் சிந்திக்கும் ஆற்றலாலும் உழைப்பாலும் தன்னை தகவமைத்துக் கொண்ட உயர்த்திக் கொண்ட பெருமையுடையது. தொடக்கக் காலத்தில் தமது உழைப்பு – தொழில் சார்ந்ததாக விளையாட்டுகள் அமைந்திருக்க வேண்டும் என்றும் பின்னர் சமுதாய வளர்ச்சிப் படிநிலையில் விளையாட்டுகள் தனித்தன்மை பெற்றிருக்க வேண்டும் என்றும் அறிஞர்கள் கருதுகின்றனர். பண்டைத் தமிழகத்தில் சிறார்க்கென்றும், ஆடவர்க்கென்றும், பெண்டிர்க்கென்றும், இருபாலர்க்கென்றும் பலவகை விளையாட்டுக்கள் இருந்தன. அவை நாநிலப் பாகுபாட்டை ஒட்டி அமைந்ததனையும் காணலாம். குறிஞ்சியில் கிளி ஓட்டுதலும் முல்லை, மருதத்தில் ஏறு தழுவுதலும் நெய்தலில் அலவன் ஆட்டலும் எடுத்துக்காட்டுகள்." என்பதன் (பதிப்புரை, சங்க இலக்கிய விளையாட்டுக் களஞ்சியம்) மூலம் அறியலாம்.

## விளையாட்டுசொல்லும்பொருளும்

விளையாட்டுகள் வேட்டைச் சமூக வாழ்தளங்களிலேயே தோற்றம் கொண்டிருக்க வாய்ப்புகள் உள்ளன. விலங்குகளை வேட்டையாடுதலும், ஆயுதங்களைக் கையாளுதலும், உடல் வலிமையைப் பேணுதலும்விளையாட்டுகளுக்கு வழிவகுத்திருக்கக் கூடும். எனினும் மனித குலம் பண்பாட்டுப் படிகளில் ஏறத் தொடங்கிய காலத்திலேயே விளையாட்டுகளும் முதன்மை பெற்றன எனலாம். ஓரினமானது மரபுத் தொடர்ச்சியின் வழியாகப் பின்பற்றிவரும் விளையாட்டுகள், அவ்வினத்தின் பண்பாட்டினைப் புரிந்து கொள்ளவும் அக்காலச் சமூகக் கொள்கைகளை வரையறுக்கவும் வல்ல இனம்சார் அடையாளங்களாகவே திகழ்கின்றன.

விளையாட்டு என்பதற்கான விளக்கத்தைச் சங்கப்புலவோர் வரையறுத்துக் கூறவில்லை. உவகை என்னும் மெய்ப்பாடு தோன்றுவதற்குரிய நான்கு வகைக் களங்களைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். அதில் ஒன்று விளையாட்டு. இதிலிருந்து மன மகிழ்ச்சியை விளைவிக்கும் ஒரு செயலே விளையாட்டு எனக் கருதலாம். மொழிப்புலவர் ஞா. தேவநேயப் பாவாணர் விளை என்றால் விருப்பம் எனப் பொருள் கொண்டு விரும்பியாடும் விளையாட்டு என்று விளக்குகிறார். தொல்காப்பியம் உரியியல் (தொல் 319) என்ற பகுதியில் கெடவரல், பண்ணை எனும் இரு சொற்களால் விளையாட்டைக் குறிக்கின்றது. இத்தொல்காப்பியக் குறிப்பு அக்காலத்தே விளையாட்டுகள் மக்களிடத்தே செல்வாக்குப் பெற்றிருந்தமையை உணர்த்துகின்றது. கெடவரல் என்பது நிலத்தில் விளையாடும் விளையாட்டையும்

*பண்ணை என்பது நீரில் விளையாடப்படும் விளையாட்டையும் குறிக்கும் என்பர். சங்க இலக்கியத்தில் விளையாட்டு என்பது பெரும்பாலும் நிலத்தில் ஆடப்படுகின்ற விளையாட்டுகளைக் குறித்தது. ஆடுதல் என்ற சொல் நீரோடு இணைந்த விளையாட்டுகளையே பெரிதும் குறித்தது.*

**சங்கத்தமிழரின்விளையாட்டுக்கொள்கைகள்.**

*சங்கத் தமிழர் பெரிதும் சமூகம் சார்ந்த செயற்பாடாகவே விளையாட்டைக் கருதினர். குழுநிலை விளையாட்டுகளும், மைதானங்களின் நடுவே இடம்பெற்ற வீர விளையாட்டுகளும் சமூகச் செயற்பாடுகளாகவே திகழ்ந்தன. அரசுகள், ஊர் மன்றங்கள், பெரு விளையாட்டுகளை நடத்தி வென்றோருக்கு மதிப்பளித்தன. சமூக அங்கத்தவர் எல்லோரும் தத்தம் வயது, பால் என்பவற்றிற்கேற்பப் பல்வேறு விளையாட்டுகளில் ஈடுபட்டனர். பெண்களை 'வீட்டுக்குள் வளர்த்தல்' (இச்செறித்தல்) என்னும் நிலை அக்காலத்தில் காணப்பட்டாலும் சிறுமியர், இளம் மகளிர் பல்வேறு விளையாட்டுகளில் ஈடுபட்டிருக்கின்றனர். ஆண்களைப் போலவே பெண்களும் பல விளையாட்டுகளில் ஈடுபட்டுள்ளனர்.*

*'சிறுமியர் வெளியிற் சென்று தம் தோழியரோடு விளையாடுவதே அறம். அவ்வாறு விளையாடுவதால் உடலும் உள்ளமும் ஆக்கம் பெறும். மாறாக வீட்டுக்குள் இருந்தால் அது அறமும் இல்லை, ஆக்கமும் தேய்ந்து விடும்' என்ற செய்தி நற்றிணை என்னும் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது.*

''விளையா டாயமொடு ஓரை யாடாது
இளையோர் இல்லிடத் திற்செறிந் திருத்தல்
அறனும் அன்றே ஆக்கமுந் தேய்ம்மெனக்.....'' (நற்றிணை 68)

*வெற்றியையும் தோல்வியையும் ஒத்த உணர்வோடு நோக்கும் பாங்கு சங்க இலக்கியங்களில் உணரப்படுகின்றது. உவகை ஊட்டுதல் என்னும் நிலையில் இருந்து பொருளியற் சார்புநிலைக்குச் சில விளையாட்டுக் கூறுகள் சங்ககாலத்திலேயே மாற்றங் கண்டன. வேளாண் சமூக அமைப்பினூடாகத் தனியுடமை உணர்வு அரும்பத் தொடங்கிய பின் சில விளையாட்டுகளின் வாயிலாக பொருள் இழப்பதுவும் பெறுவதும் இயல்பாயிற்று. காய்களை இழந்து பெறுகின்ற பல்லாங்குழி இத்தகைய ஒரு விளையாட்டே என்கிறார் தொ. பரமசிவன்.*

**மகளிர் விளையாட்டுக்கள்**

*சங்க கால மகளிர் விளையாட்டுக்கள் உடற்திறனை வளர்க்கும் விதமாகவும், உடலகை மெருகுபடுத்தும் விதமாகவும் அமைந்திருந்தது எனலாம். பண்டைக் காலத்தில்,*

1. புனல் விளையாட்டு
2. வட்டாடுதல்
3. பந்தாடுதல்
4. கழங்காடுதல்
5. ஊசலாட்டம்
6. ஓரையாடல்
7. வண்டலிழைத்தல்

*ஆகிய விளையாட்டுக்கள் மகளிரால் விளையாடப்பட்டன.*

**புனல் விளையாட்டு**

*இதனை நீர் விளையாட்டு என்றும் கூறுவர். சங்க காலத்தில் ஆடவர் பெண்டீர் என்ற இருவரும் நீர் விளையாட்டில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதற்குப் பல்வேறு சான்றுகள் காணப்படுகின்றன. இவ்விளையாட்டு அருவியில் நிராடுதல், குளத்தில் நீராடி மகிழ்தல், ஆறுகளில் நீராடுதல் எனப் பல நிலைகளில் காணலாம். இவ்விளையாட்டு இன்று மேம்படுத்தப்பட்டு 'கீணீமீமீக்ஷீ ஞிவீஸ்வீஸீரீ' என்று வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.*

**புனல் நயந்து ஆடல்**

*இந்நீர் விளையாட்டு அக்காலத்தில் சிறப்புற்று விளங்கியிருக்கின்றது. கழார் என்னும் ஊரிலுள்ள காவிரியாற்று நீர்த்துறையில், அரசன் கரிகாலன், அவன் மகள் ஆதிமந்தி முன்னிலையில், ஆட்டனத்தி என்ற நீச்சல் வீரனும், காவிரி என்னும் நீச்சல்மகளும் இணைந்து நீச்சல் நடனம் ஆடிக் காட்டினர் என அகநானூறு கூறுகின்றது.*

*"அத்தி தன் காலில் அணிந்திருந்த கழல் அணியை நீரில் மூழ்கிக்கொண்டு காலை நீருக்குமேல் தூக்கி*

*ஆட்டிப் புரட்டிக் காட்டினான். வயிற்றில் கட்டிய ஆடை நழுவாமல் இருக்கக் கச்சம் கட்டியிருந்தான். அத்துடன் பாண்டில் என்னும் அணிகலனும் அணிந்திருந்தான். அந்தப் பாண்டில் அணியில் மணிகள் கோக்கப்பட்டிருந்தன. அந்த மணிகள் ஒலிக்கும்படி வயிறு மட்டும் மேலே தெரியும்படி உருண்டு ஆட்டிக் காட்டினான். இப்படி ஆடிய அத்தியோடு கூடி ஆடியவள் காவிரி. அத்தியை விரும்பிய காவேரி நீரோட்டத்துடன் அவனை ஒளித்துக் கொண்டு சென்றாள்" என அகநானூறு மேலும் கூறுகின்றது.*

''கல்லா யானை கடி புனல் கற்றென,
மலி புனல் பொருத மருது ஓங்கு படப்பை,
ஒலி கதிர்க் கழனி, கழாஅர் முன்துறை,
கலி கொள் சுற்றமொடு கரிகால் காண,
தண் பதம் கொண்டு, தவிர்ந்த இன் இசை
ஒண் பொறிப் புனை கழல் சேவடிப் புரள,
கருங் கச்சு யாத்த காண்பின் அவ் வயிற்று,
இரும் பொலம் பாண்டில், மணியொடு தெளிர்ப்ப,
புனல் நயந்து ஆடும் அத்தி அணி நயந்து,
காவிரி கொண்டு ஒளித்தாங்கு'' (அகம் 376)

**பண்ணை**

*மகளிர் நீரில் பாயும் விளையாட்டுக்குப் பண்ணை என்று பெயர். சங்க காலத்தில் ஆற்றங்கரையிலிருந்த மருதமரத்தில் ஏறி ஒருத்தி பண்ணை பாய்ந்தாள். அது மயில் ஒன்று விண்ணிலிருந்து மண்ணுக்குத் தோகை விரித்தபடி இறங்குவதைப் போன்றிருந்தது. அவள் அணிந்திருந்த அணிகலன்கள் மயிலின் தோகையில் காணப்பட்ட வண்ணப்புள்ளிகளைப் போன்றிருந்தன என ஐங்குநூறு கூறுகின்றது.*

''விசும்பிழி தோகை சீர் போன்றிசினே
பசும்பொன் அவிரிழை பைய நிழற்ற
கரைசேர் மருதம் ஏறிப்
பண்ணை பாய்வோள் தண்ணறுங் கதுப்பே'' – (ஐங்குறுநூறு 74.)

*மரந்தை என்னும் ஊரில் சங்ககால மகளிர் கடலிற் பாய்ந்து விளையாடினர். அப்போது அவர்கள் அணிந்திருந்த பூக்கள் கடலலையில் மிதந்து வந்தன என நற்றிணை (395) கூறுகின்றது.*

**படகு விளையாட்டுகள்**

*சங்ககாலத்தோர் பலவகையான படகு விளையாட்டுகளை விளையாடியிருக்கின்றனர். பின்படகு* (rowing), *முன்படகு* (canoeing) *வளிப்படகு* (wind&surfing) *என்பன முதன்மையான படகு விளையாட்டுகளாக இருந்தன. படகை அக்காலத்தோர் புணை என்றும் அழைத்தனர். படகை முன்புறமாகச் செலுத்துவதும், பின்புறமாகச் செலுத்துவதும் இக்காலத்திலும் உண்டு. முன்படகைத் தலைப்புணை என்றும், பின்படகைக் கடைப்புணை என்றும் அழைத்திருக்கின்றனர்.*

*"பலர் புணை செலுத்தி நீரில் விளையாடினர். தலைவன் செலுத்திய புணையை ஒருத்தி பின் தொடர்ந்தாள். அவன் தலைப்புணையில் முன்னோக்கிச் சென்றால் அவளும் தலைப்புணையில் முன்னோக்கி வந்து அவனைப் பின் தொடர்ந்தாள். அவன் கடைப்புணையில் பின்னோக்கிச் சென்றால் அவளும் கடைப்புணையில் பின்னோக்கிச் சென்று அவனைத் தொடர்ந்தாள். அவன் புணையைக் கைவிட்டு நீரோடு மிதந்து சென்றால், அவளும் அவ்வாறே செய்து அவனைத் தொடர்ந்தாள்" என்ற செய்தியைக் குறுந்தொகைப் பாடல் தருகின்றது.*

''தலைப் புணைக் கொளினே, தலைப் புணைக் கொள்ளும்;
கடைப் புணைக் கொளினே, கடைப் புணைக் கொள்ளும்;
புணை கைவிட்டுப் புனலோடு ஒழுகின்,
ஆண்டும் வருகுவள் போலும்'' (குறுந்தொகை 222)

**நீச்சல்பந்தாட்டம்**

*இவ்விளையாட்டைக் காதலர் பெரிதும் விளையாடியிருக்கின்றனர். நீராடும் காதலர் ஒருவர்மீது ஒருவர் பந்தை வீசி விளையாடுவர். 'பூநீர் பெய் வட்டம்' என்று அந்தப் பந்து அழைக்கப்பட்டிருக்கின்றது. பலவகை வண்ண நீரினால் நிரப்பப்பட்ட பந்துகளை ஒருவர் மீது ஒருவர் வீசிக்கொள்வர். பந்து மோதியதும் உடைந்து வண்ண நீர் சிந்தும். இக்காலத்தில் வட இந்தியாவில் கொண்டாடப்படும் 'கோலி' விழாவை ஒத்ததாக இது காணப்படுகின்றது. இதன் தொடர்ச்சியாக இன்றும் மாமன் முறை கொண்டோர் மீது மஞ்சள் நீர் ஊற்றும் வழக்கம் காணப்படுகின்றது. இச்செய்தியைப் பரிபாடல் தெரிவிக்கின்றது.*

“கண் ஆரும் சாயற் கழித் துரப்போரை
வண்ண நீர் கரந்த வட்டு விட்டு எறிவோரும்” (பரிபாடல் 11)

“உறைத்தும் செறுத்தும் உணர்த்துவானைப்
புல்லாது ஊடிப் புலந்து நின்றவள்
பூ எழில் வண்ண நீர் பூரித்த வட்டு எறிய..” (பரிபாடல் 12)

**அருவியில் நீராடல்**

*உயர்ந்த மலைச்சிகரங்களில் பொழிந்த மழைநீரானது வெள்ளை ஆடை விரித்தது போல் அருவியாகப் பெருக்கெடுத்து குதித்தோடிப் பாய்ந்து வரும். இப்படி ஓடிவரும் அருவியிலே நீராட வேண்டும் என்ற நீங்க விருப்பமுடைய நாங்களும் அதைத் தவற விட்டுவிடாது வெண்பளிங்கு கரைந்தோடி வருவது போலப் பாய்ந்து வரும் அருவிச் சுனைகளிலே எங்கள ஆசை தீரப் பாடியும், ஆடியும் நீராடினோம். பின்னர் பின்பக்க முதுகிலே தாழ்ந்து விழும் பொன்னி பொதித்த நீல மணி போன்ற கூந்தலின் ஈரம் போகத் துவட்டி உலரவைத்தோம். எங்கள் கண்களெல்லாம் சிவப்பேறிக் கிடந்தன. நீரில் நீண்ட நேரம் நீராடியதால் கண்கள் சிவந்தன என்ற நீரில் விளையாடிய காட்சியை,*

“அண்ணல் நெடுங்கோட்டு இழிதரு தென்நீர்
அவிர் துகில் புரையும் அவ்வெள் அருவி
தவிர்வுஇல் வேட்கையேம் தண்டாது ஆடிப்
பளிங்கு சொரிவு அன்ன பாய்சுனை குடைவுழி
நளிபடு சிலம்பில் பாயம்பாடி
பொன்எறி மணியின் சிறுபுறம் தாழ்ந்த எம்
பின்இரும் கூந்தல் பிழிவனம் துவரி
உள்ளகம் சிவந்த கண்ணேம்” (குறிஞ்சிப்பாட்டு 54–61)

*என்ற குறிஞ்சிப் பாட்டு காட்சிப் படுத்துகிறது.*

**வட்டாடுதல்**

*அக்காலத்தில் சிறந்து விளங்கிய விளையாட்டுக்களில் ஒன்று வட்டாடுதலாகும். இதற்கென்று அரங்கிழைத்துக் காய்களை நகர்த்தி வட்டாடுவர். வேப்பமரத்து நிழலில் கல்லாச் சிறுவர்கள் நெல்லிவட்டாடிய செய்தியை இளங்கீரனாரின்*

“பொரியரை வேம்பின் புள்ளிநீழல்
கட்டளை யன்ன வட்டரங்கிழைத்துக்
கல்லாச் சிறாஅர் நெல்லி வட்டாடும்
வில்லேருழவர் வெம்முனைச் சீறூர்” (நற்றிணை, 3:2–5)

*என்ற நற்றிணைப் பாடல் விவரிக்கின்றது.*

*பழைமையான அழகிய காட்டிலே பளிங்கு போன்று விளங்கும் உயர்ந்த பெரிய பாறைகளின் மேலாக்க் கிடக்கும் நெல்லி மரத்தின் பல காய்கள் கிடக்கும் அதனைச் சிறுமியர்களும், சிறுவர்களும் வட்டாடச் சேர்த்து வைத்துக் கழங்குகளைப் போல விளையாடுவர். இதனை,*

“...மூதையலம் காட்டுப்
பளிங்கத் தன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை ஈட்டுவட்டு ஏய்ப்ப” (அகம்5:7–10)

*என பாலை பாடிய பெருங்கடுங்கோ எடுத்துரைக்கின்றார்.*

*வட்டாடுதல் வல்லாடுதல் என்று வழங்கப்டுவது குறிப்பிடத்தக்கது. வயது முதிர்ந்த பெரியோர்கள் சூதாடு கருவியை இட்டு இட்டுக் குழிந்து போன பாழ்பொதியில் பற்றி,*

“கலிகெழு கடவுள் சுந்தம் கைவிடல்
பலிகண் மாறிய பாழ்படு பொதியில்
நரை மூதாளர் நாயிடக் குழிந்த
வல்வின் நல்லகம்” (புறம்., 52:12–15)

*எனப் புறப்பாடல் நவில்கின்றது.*

**பந்தாடுதல்**

*நூலினால் வரிந்து கட்டப்பட்ட ஒரு வகையான பந்தினைக் கொண்டு ஆடுதல் அன்றைய களிர் வழக்கமாக இருந்த்து. மாடிவீடுகளின் மேல் மாடங்களில் பெண்கள் வரிப்பந்தாடியது பற்றி,*

''பீலி மஞ்ஞையின் இயலிக் கால
தமனியப் பொற்சிலம் பொலிப்ப உயர்நிலை
வான் தோய் மாடத்து வரிப்பந்து அசைஇக்'' (பெரும்பாணா., 331–333)

*என்று தெளிவுறுத்துகின்றது.*

**கழங்காடுதல்**

*மகளிர் விளையாட்டுக்களில் கழங்காடுதலும் ஒன்று. கையிலே அணிந்த பொன்வளையல்கள் அசைய மெத் மெத்தென்று மெதுவாக இருக்கும் முத்தைப் போன்ற வெண்மணலில் பொன்னால் செய்த கழற்சிக் காயைக் கொண்டு பெண்கள் கழங்காடி மகிழ்ந்தனர் என்ற செய்தியை,*

''கைபுனை குறுந்தொடி தந்தப் பைப்பய
முத்த வார்மணல் பொற்கழங்கு ஆடும்'' (பெரும்., 334–335)

*எனப் பெரும்பாணாற்றுப்படை எடுத்துரைக்கின்றது. வீட்டுத் திண்ணைகளில் பொன்னாலான கழங்கினை வைத்து விளையாடியதாக,*

''செறியரிச் சிலம்பின் குறுந்தொடி மகளிர்
பொலஞ்செய் கழங்கிற் தெற்றியாடும்'' (புறம்., 36)

*என்ற புறநானூற்று வரிகள் மொழிவது நோக்கத்தக்கது.*

**ஊசலாட்டம்**

*மரக்கிளைகளில் கயிற்றினை (அல்லது) கொடிகளைக் கட்டி அதிலமர்ந்து ஆடி விளையாடுவது ஊசலட்டமாகும். அச்சமயத்தில் பாடும் பாடல் ஊசல் வரியாகும். இவ்விளையாட்டை ஊஞ்சலாட்டம் என்றும் கூறுவர். மகளிர் விளையாடிய ஊசலாட்டத்தை,*

''பெருங்கயிறு நாலும் இரும்பனம் பிணையில்
பூங்கண் ஆயம் ஊக்க ஊக்காள்'' (நற்., 6–7)

*என்று நற்றிணை குறிப்பிடுகின்றது. புலிநக்க் கொண்றையின் உயர்ந்த கிளையிலே கயிற்றிலே கட்டித் தொங்கவிடப் பெற்ற ஊஞ்சலில் அமர்ந்து பெண்கள் விளையாடிய செய்தியினை,*

''ஞாழல் ஓங்குசினைத் தொடுத்த கொடுங்கழித்
தாழை வீழ்கயிற்று ஊசல் துங்கிக்
..........புனத்து அயல்'' (நற்., 5–6)

*எனக் குறிப்பிடுவது நோக்கத்தக்கது.*

**ஓரையாடுதல்**

*ஓரை என்பது சங்ககால இளம் மகளிர் விளையாடிய விளையாட்டுகளில் ஒன்றாகும். ஓரை என்றால் ஒலி எழுப்புதல் என்று பொருள். இது ஆரவாரம் எழுமாறு ஆடப்படும் ஆட்டங்களைக் குறித்ததாகக் கொள்ளலாம்.*

*கடல் அலை பாயும் மணலிலும், ஆற்று மணலிலும், சேற்று நிலத்திலும், முற்றத்தில் பரப்பப்பட்ட மணலிலும் இது விளையாடப்பட்டதாகச் சங்கப் பாடல்கள் தெரிவிக்கின்றன. ஆமை, நண்டு ஆகியவற்றைக் கோல் கொண்டு அலைத்து விளையாடுவது ஓரையாடுதல் என்ற விளையாட்டில் ஒருவகையாகும். இவ்விளையாட்டை 'அலவனாட்டல்' என்று பட்டினப்பாலை குறிப்பிடுகின்றது.*

''தாதிற் செய்த தண்பனிப் பாவை
காலை வருந்தும் கையா றோம்பென
ஓரையாம்ம் கூறக் கேட்டும்'' (குறுந்., 480)

''துரவுக்கடல் பொறாத விரவுமணல் அடைகரை
ஓரை மகளிர் ஓராங்கு ஆட்ட'' (குறுந்., 310)

*என சங்க இலக்கிய வரிகள் ஓரையாடல் பற்றி தெளிவாக எடுத்துரைக்கின்றன.*

*இதுபோன்று பல்வேறு வகையான விளையாட்டுக்களை சங்க கால மகளிர் விளையாடி மகிழ்ந்துள்ளனர். இவ்விளையாட்டுக்கள் அவர்களிடையே ஒற்றுமையையும், உடலுக்கும் உயிருக்கும் மனஉறுதியையும் நலவாழ்வையும் அளித்து வாழ்க்கையை மேம்படுத்தின என்பது அனைவரும் அறிந்து கொள்ளக் கூடிய செய்தியாக விளங்குகின்றது.*

**துணைநூற் பட்டியல்**

1) சங்க இலக்கியம் முழுவதும் – பாட்டுத் தொகையும் எஸ்.வையாபுரி பிள்ளை பாரி நிலையம் சென்னை.

2) பண்பாட்டு அசைவுகள் – தொ.பரமசிவம் – காலச்சுவடு பதிப்பகம்